**செய்தி வெளியீடு எண்:364** **நாள்: 11.06.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (11.6.2017) ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை**

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, திராவிட கட்சிகளின் தொடக்கப்பள்ளியான இந்த ஈரோடு மண்ணுக்கு வந்து உங்களையெல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மக்கள் போற்றும் மகத்தான தலைவி
அம்மா அவர்களின் ஆசியோடு
ஈரோட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு
அடிக்கல் நாட்டு விழா,
முடிவுற்ற பணிகளை துவக்கி வைக்கும் விழா
மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா
என முப்பெரும்விழாவாக இவ்விழா
சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

இந்த இனியவிழாவில் தலைமையுரையாற்றிய மாண்புமிகு
பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை
அமைச்சர் திரு.**கே.ஏ.செங்கோட்டையன்** அவர்களே,

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் **திரு.பி. தங்கமணி** அவர்களே,

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.**எஸ்.பி. வேலுமணி** அவர்களே,

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. **கே.சி.கருப்பணன்** அவர்களே,

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், திரு. **எஸ். செல்வகுமார சின்னையன்** அவர்களே,

ஈரோடு மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு. **கே.வி.ராமலிங்கம்** அவர்களே,

ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு. **கே.எஸ்.தென்னரசு** அவர்களே,

மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

திரு.**வே.போ.சிவசுப்பிரமணி** அவர்களே,

அந்தியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

திரு. **இ.எம்.ஆர்.ராஜா (எ) கே.ஆர்.ராஜாகிருஷ்ணன்**

அவர்களே,

காங்கேயம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

திரு.**உ. தனியரசு** அவர்களே,

பவானிசாகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

திரு.**சு.ஈஸ்வரன்** அவர்களே,

வரவேற்புரை வழங்கிய ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர்

டாக்டர் **எஸ். பிரபாகர்** அவர்களே,

நன்றியுரை வழங்கவுள்ள

ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்

திரு.**மு.சீனிஅஜ்மல்கான்** அவர்களே,

அரசு அலுவலர்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே,

வணக்கத்திற்குரிய பெரியோர்களே,

தாய்மார்களே, பயனாளிகளே,

உங்கள் அனைவருக்கும் முதற்கண்

என்னுடைய நன்றி கலந்த

வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு,

இன்றைக்கு ஈரோடு என்று சொன்னாலே அம்மாவினுடைய கோட்டை. 2016 சட்டமன்ற தேர்தலிலே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவால் நிறுத்தப்பட்ட அனைத்து சட்டமன்ற வேட்பாளர்களும் வெற்றி பெற்று இருக்கக்கூடிய ஒரே மாவட்டம் நம்முடைய ஈரோடு மாவட்டம். அம்மாவுக்கு பெருமை சேர்த்த மாவட்டம், அம்மாவினுடைய எஃகு கோட்டையாக விளங்குகின்ற மாவட்டம் ஈரோடு மாவட்டம் என்று இந்த நேரத்திலே குறிப்பிட்டு அப்படி அம்மாவினுடைய கோட்டையாக விளங்குகின்ற இந்த மாவட்டத்திலே நான் வந்து உரையாற்ற நல்வாய்ப்பினை உருவாக்கித் தந்த, இங்கே மேடையிலே இருக்கின்ற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் முதலிலே, மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொண்டு,

அன்னிய ஆதிக்கத்துக்கு எதிராக போரிட்டதற்காக
வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்ட
தீரன் சின்னமலை என்ற ஈரோட்டு வீரமகனை
நினைவு கூரும் வகையில்
மாண்புமிகு அம்மா அவர்கள்
ஈரோட்டு ஓடாநிலையில் மணிமண்டபமும்,
அவர் தூக்கிலிடப்பட்ட சேலம் சங்ககிரியில்

நினைவு சின்னமும் அமைத்தார்கள்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே
நதிநீர் இணைப்பிற்கு வித்திட்ட
காளிங்கராயன் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் விதத்தில்
அவருக்கு மணிமண்டபம் அமைத்திட,
மாண்புமிகு அம்மா அவர்கள்
2016–ம் ஆண்டு ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய்
ஒதுக்கீடு செய்தார்.

இம்மணி மண்டபத்தில் 6 அடி உயரத்தில்
காளிங்கராயன் அவர்களது
முழுஉருவ வெண்கலச்சிலை அமைக்கப்பட்டு
இந்த ஆண்டு இறுதிக்குள் மணிமண்டபம் திறந்து வைக்கப்படும். அந்த மண்டபத்தையும் ஆரம்பித்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

உலக புரட்சி சிந்தனையாளர்கள் வரிசையில்
ஒருவராக விளங்கி, தமிழரின்
வழிகாட்டியாக திகழ்ந்த, பகுத்தறிவு பகலவன்
தந்தை பெரியார் இந்த

ஈரோட்டு மண்ணில் பிறந்து ஈரோட்டை
உலகம் அறியச் செய்தார்.

தமிழக அரசியலை மாற்றி அமைக்க
தன் நாவையும், எழுதுகோலையும்
பயன்படுத்திய தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர்
பேரறிஞர் அண்ணா அவர்கள்
சில வருடங்கள் தந்தை பெரியாருடன்
ஈரோட்டில் தங்கி எழுத்துப் பணியாற்றியுள்ளார்.

இலக்கியம், வரலாறு, தொல்பொருள்
என பல்வேறு சிறப்புகளைப் பெற்ற
ஈரோட்டுக்கு வந்துபோவதால்
என்னைப் போன்ற பொதுவாழ்க்கையில்
ஈடுபடுபவர்களுக்கு புத்துணர்ச்சி ஏற்படுகின்றது.
பழமையும், பெருமையும் மிக்க ஈரோடு மாநகரம்
கட்டமைப்பிலும், சாலை மேம்பாட்டிலும்
சிறந்து விளங்க வேண்டும் என்பது
மாண்புமிகு அம்மாவின் விருப்பமாக இருந்தது.
அம்மாவின் விருப்பத்தை
நிறைவு செய்வது எங்கள் கடமை.

ஈரோடு மாநகரம், தொழிற்சாலைகள் மற்றும்
வணிக வளாகங்கள் நிறைந்த நகரமாக விளங்குகிறது.

விசைத்தறி, கைத்தறி மற்றும் தொழிற்சாலைகளின்
எண்ணிக்கை இங்கு ஆண்டுக்கு ஆண்டு
அதிகரித்து வருகிறது.

இதனை கருத்தில் கொண்டுதான்
இதய தெய்வம் புரட்சித் தலைவி
மாண்புமிகு அம்மா அவர்கள்
போக்குவரத்து நெரிசலை சீர்படுத்துவதற்கு
ஈரோடு–பெருந்துறை–காங்கேயம் சாலை சந்திப்பில்
மேம்பாலம் அமைப்பதற்காக
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைக்கு
58 கோடியே 54 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு
செய்து ஆணை பிறப்பித்தார்கள்.

இந்த மேம்பாலம் அமைக்கும் பணிக்கு,
மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியோடு,
இன்று அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைப்பதில்
நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்விடத்தில் மேம்பாலம் அமைப்பதினால்
வணிக நகரமான ஈரோட்டிற்கு பெருந்துறை,
காங்கேயம், பழனி, திருப்பூர், கோயம்புத்தூர்,
சேலம், நாமக்கல், கரூர் ஆகிய நகரங்களிலிருந்து வரும்
வாகனங்கள் தடையின்றி சென்று வர
பயனுள்ளதாக அமையும்.

அலுவலகம் மற்றும் வணிகத்திற்கு செல்லும் பொது மக்கள்,
கல்லூரிகள், பள்ளிகளுக்கு
செல்லும் மாணவ மாணவிகள்
மற்றும் அவசர உதவிக்கு எதிர்ப்புறமுள்ள மருத்துவமனைக்குச்
செல்லும் ஊர்திகள்
இந்த சந்திப்பை கடந்து செல்லும்
கட்டாயம் உள்ளதால்
அவர்களுக்கு இப்பாலம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
இந்த மேம்பாலம் பிரஃப் ரோடு – பெருந்துறை மார்க்கத்தில்
இருவழித் தடமாகவும்,
தாராபுரம் மார்க்கத்தில் இடைவழி தட பாலமாகவும்
அமைக்கப்படவுள்ளது.

இம் மேம்பாலத்தில் பயன்பாட்டு சாலைகள்,
நடைபாதை வசதிகள் மற்றும்

மழைநீர் வடிகால் அமைக்கப்படவுள்ளது.
இச்சந்திப்பில் 30 மீட்டர் விட்டம் கொண்ட
ரோட்டரி அமைத்து, நீரூற்று மற்றும்
இயற்கை நிலக்காட்சி அமைத்து
மேம்பாடு செய்யப்படவுள்ளது.
பாதசாரிகள் செல்லவும் மற்றும்
பயன்பாட்டு சாதனங்களை கொண்டு செல்லவும்
பாலத்தின் இருபுறங்களிலும் கான்கிரீட் பாதைகள்
அமைக்கப்படவுள்ளன.

மேலும், ஈரோடு மாநகராட்சி பகுதியில் வசிக்கும்
மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில்
அம்ருத் திட்டத்தின் கீழ்

484 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
புதிய குடிநீர் திட்டத்திற்கு
இன்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் ஒரு மிகப்பெரிய திட்டம். இந்தத் திட்டத்தை விரைந்து முடிப்பதற்கு நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் பேருதவியாக இருந்தார். இந்தத் திட்டத்தின் கீழ்

பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் உடனடியாக வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்ததன் விளைவாக, விரைந்து இத்திட்டத்தை முடிப்பதற்காக இந்த திட்டம் குறுகிய காலத்திலே, அதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, பணி துவங்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு எடுத்திருக்கிறது. ஆகவே, ஈரோடு மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட காவிரி தண்ணீர் இந்த திட்டத்தின் மூலமாக வழங்குவதற்கு, அம்மாவினுடைய அரசால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஈரோடு மாநகராட்சி
துப்புரவு பணியாளர்களுக்கு
3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்பு கட்டும் பணியையும்,
75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
நவீன இறைச்சிக் கூடம் கட்டும் பணியும்
துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாநகராட்சி பெண்கள் மேனிலைப் பள்ளியில்
50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணிக்கு
அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

அம்ருத் திட்டத்தின் கீழ்

ஈரோடு மாநகராட்சி பகுதியில் நான்கு இடங்களில்

2 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

விளையாட்டுத் திடல் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித்துறையின் மூலமாக

பள்ளிக் கல்வித் துறையில் உள்ள

12 உயர்நிலை பள்ளிகளுக்கு

20 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள்

கட்டும் பணி என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பின் சார்பில்

கீழ்பவானி பாசனத் திட்டத்திற்கு உட்பட்ட

15 ஆயிரத்து 743 ஏக்கர் பாசன நிலங்கள்

பயன்பெறும் வகையில்

காளிங்கராயன் வாய்க்கால்

36 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

புனரமைக்கும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம்

தாய் திட்டத்தின் கீழ்

18 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 513 பணிகளும்,

அம்மா பூங்கா திட்டத்தின் கீழ்
3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15 பூங்காக்கள்
அமைக்கும் பணியையும்,

அம்மா உடற்பயிற்சி கூடம் திட்டத்தின் கீழ்
1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
15 உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கும் பணியையும்,
பசுமை வீடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ்
10 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
593 பசுமை வீடுகள் கட்டும் பணியையும்,
பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ்
50 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
2 ஆயிரத்து 998 வீடுகள் கட்டும் பணியையும்
நான் இன்று துவக்கி வைத்துள்ளேன்.

இன்றைய தினம், மொத்தம்
4,161 பணிகள் 692 கோடியே 3 இலட்சத்து
84 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்
புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மேலும், ஈரோடு மாநகராட்சியில்
அம்ருத் திட்டத்தின் கீழ் 4 இடங்களில்

2 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் அமைக்கப்பட்டு
பொது மக்களின் பயன்பாட்டிற்கு
தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ்
வீடற்ற சாலையோரம் வசிப்பவர்களுக்கு
இரவு நேர தங்கும் விடுதி 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.
பொதுப்பணித்துறையின் சார்பில்
தரம் உயர்த்தப்பட்ட 12 அரசு உயர்நிலைப் பள்ளிகளில்
கூடுதல் வகுப்பறைகள்,
புதிய கட்டடங்கள்
மற்றும் ஆய்வகக் கட்டடங்கள்
18 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பெருந்துறை வட்டம்
சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில்
தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு
மாவட்ட அலுவலகம் மற்றும் ஆய்வுக் கூடம்
2 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு,
திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்ட

வேளாண் மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பில்

அந்தியூர் வட்டம், அந்தியூர்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில்

ஊரக கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து

மேற்கொள்ளப்பட்ட 600 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட

பரிவர்த்தனை கூடம்

50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு

திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பெருந்துறை வட்டம், திண்டல் வித்யா நகரில்

ஈரோடு விற்பனை கூட நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட

மாநில அக்மார்க் ஆய்வகத்திற்கு

30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு,

திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு துறையின் சார்பில்

ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில்

திண்டல் பகுதியில்

14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்

குளியல் அறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டு,

திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில்

20 ஊராட்சிகளில் 3 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

கிராம ஊராட்சி சேவை மைய கட்டடங்களையும்,

7 ஊராட்சிகளில் 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

கட்டப்பட்ட புதிய அங்கன்வாடி கட்டடங்களும்

திறந்து வைக்கப்பட்டுள்ளன.

ஆக மொத்தம், இன்றைய தினத்தில்,

**31 கோடியே 60 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில்**

**50 பணிகள், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக,**

**திறந்து வைக்கப்பட்டுள்ளன.**

**இதைத்தவிர,** வருவாய் துறையின் சார்பில்

1,688 நபர்களுக்கு 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

வீட்டுமனைப் பட்டாக்கள்,

தையல் இயந்திரங்கள்,

சலவைப் பெட்டிகள்,

வன நில உரிமைச் சான்றுகள் உள்ளிட்ட உதவிகளும்,

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில்

பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம் மற்றும்

பசுமை வீடு வழங்கும் திட்டத்தில்

7 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

வீடு கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்படுகிறது.
சமூக நலத்துறையின் சார்பில்
திருமண நிதியுதவியாக 198 பட்டதாரி பெண்களுக்கு
50 ஆயிரம் ரூபாய் வீதம் 99 இலட்சம் ரூபாயும்,

102 பட்டதாரி அல்லாத பெண்களுக்கு
25 ஆயிரம் ரூபாய் வீதம் 25 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்
ஆக மொத்தம் 300 பெண்களுக்கு
1 கோடியே 24 இலட்சத்து 50 ஆயிரம்
ரூபாய் நிதியுதவியாகவும்,

தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ்
74 இலட்சத்து 15 ஆயிரத்து 500 ரூபாய் மதிப்பீட்டில்
நபர் ஒருவருக்கு 8 கிராம் வீதம்
2,400 கிராம் தங்க நாணயங்களும்,

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில்
34 நபர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
பல்வேறு உபகரணங்களும் வழங்கப்படுகிறது.

அதுமட்டுமல்ல, மாற்றுத்திறனாளிகளுக்கு,
மாண்புமிகு அம்மாவினுடைய அரசால்,
அவர்களுடைய வேலைவாய்ப்பு

4 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது
என்ற மகிழ்ச்சியான செய்தியை
இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் சார்பில்
மகாத்மா காந்தி புன்கர் பீமா யோஜனா
காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்
மறைந்த 5 உறுப்பினர்களின் குடும்பத்தினர்களுக்கு
தலா 60 ஆயிரம் ரூபாய் வீதம் 3 இலட்சம் ரூபாய்க்கான
காசோலைகளும் வழங்கப்படுகிறது.

தொழிலாளர் நலத்துறையின் சார்பில்
சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ்
தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம் மற்றும்
அமைப்புசாரா தொழிலாளர் நலவாரிய
உறுப்பினர்களின் வாரிசுதாரர்கள்
10 மற்றும் 12–ம் வகுப்பு பொதுத்தேர்வில்
தேர்ச்சி பெற்று உயர்கல்வி பயில கல்வி உதவித்தொகை,

ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு உதவித்தொகைகள்
1,212 நபர்களுக்கு 29 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய்
மதிப்பீட்டிலும்

தாட்கோ திட்டத்தின் கீழ்

30 நபர்களுக்கு 28 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்

பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

**ஆக மொத்தம் இன்று**

**இவ்விழாவில் 3,701 நபர்களுக்கு**

**13 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்**

**நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது**

**என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

ஈரோடு மாவட்டத்தில்

2011–லிருந்து 2017 வரை

834 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

2062.93 கி.மீ. நீளமுள்ள சாலைகளும்,

81 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

47 பாலங்களும்,

ஆக மொத்தம் 915 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இதைத்தவிர

306 கி.மீ. நீளமுள்ள சாலைப்பணிகள்

246 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

89 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

6 பாலங்களும்,

57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்

5 சிறு பாலங்களுக்குமான பணிகள்

தற்போது நடைபெற்று வருகின்றன.

சாஸ்திரி நகரில்

சென்னிமலை சாலையிலிருந்து

பெரிய சடையம்பாளையம் செல்லும் சாலையில்

10 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மேம்பாலமும்,

பெரிய கொடிவேரி மற்றும்

அக்கரை கொடிவேரிக்கு இடையே

பவானி ஆற்றின் குறுக்கே

13 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பாலமும்,

கட்டும்பணி நடைபெற்று வருகின்றன.

இதைத்தவிர, ஈரோடு நகரத்திற்கு

வெளிவட்டச்சாலை,

76 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்,

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால்

சட்டப்பேரவை விதி 110ன்கீழ் அறிவிக்கப்பட்டு

அப்பணிகள் நடைபெற்று வருகின்றன

என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், கடந்த ஓராண்டில்
ஈரோடு மாவட்டத்தில்
மாண்புமிகு அம்மாவின் பொற்கால ஆட்சி
பல சாதனைகளை செய்து வருகிறது.
அவை அனைத்தையும் சொல்ல நேரமில்லையென்றாலும்
ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிட எனக்கு கடமை உள்ளது.

108 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 361 முடிவுற்ற திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டது.

வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம்
வழங்கும் திட்டத்தில்
6 இலட்சத்து 62 ஆயிரத்து 739
குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

36 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில்
98.17 கி.மீ நீள நீர்வரத்து வாய்க்கால் தூர்வாரும் பணி,
அணைகள் மற்றும் தடுப்பணைகள் புனரமைப்பு பணியும்
இங்கு சிறப்பாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக்
காப்பீட்டுத் திட்டத்தின் கீழ்
16,872 நபர்களுக்கு 30 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில்

சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு
மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ்
14,125 கர்ப்பிணி பெண்களுக்கு
12 கோடியே 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம்
31,658 விவசாயிகளுக்கு
245 கோடியே 35 இலட்சம் ரூபாய்
பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

307 கோடியே 37 இலட்சம் ரூபாய்
கூட்டுறவு விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டு
52,994 விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.
3,203 ஏழைப் பெண்களுக்கு
18 கோடியே 60 இலட்சம் ரூபாய் திருமண நிதி உதவியுடன்
12,812 கிராம் தாலிக்குத் தங்கம் வழங்கப்பட்டுள்ளது.

1,33,880 வேளாண்மை மற்றும்
தோட்டக் கலைப்பயிர் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு
59 கோடியே 65 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்

10,229 நபர்களுக்கு 10 கோடியே 51 இலட்சம் ரூபாய்
உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

வறட்சி பாதித்த பகுதிகளில்
17 கோடியே 87 இலட்சம் ரூபாய் செலவில்
குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

165 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில்
289 கி.மீ நீளச்சாலைகள்
மேம்பாடு செய்யப்பட்டுள்ளன.
4 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவில்
56 குடிமராமத்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

குளம், ஏரிகளை தூர்வாரும் திட்டத்தின் கீழ்
10,665 விவசாயிகள் வண்டல் மண் எடுத்து
பயனடைந்து உள்ளனர்.

ஆகவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு, விவசாயிகள் நீண்டகாலமாக கோரிக்கை வைத்த, நம்முடைய நிலங்களைப் பண்படுத்த வேண்டுமென்பதற்காக, அந்தந்தப் பகுதியிலே உள்ள ஏரிகள், குளங்கள், அணைகளிலிருந்து வண்டல் மண் எடுத்து நாங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று அம்மா அரசுக்கு

வேண்டுகோள் வைத்தார்கள். அதை அம்மா அரசு இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறது என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள், தங்கள் பகுதிக்கு அருகேயுள்ள அணைகள், குளங்கள், ஏரிகளிலிருந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் அனுமதி பெற்று, அவர்களுக்குத் தேவையான வண்டல் மண்ணை இலவசமாக அள்ளிக்கொள்ள அரசு அனுமதியளித்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல இன்றைக்கு மணல் விலை அதிகரித்துக்கொண்டு செல்வதாக என்னிடம் கருத்து தெரிவித்தார்கள். ஏற்கனவே, பொதுமக்கள் கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அம்மாவினுடைய அரசு, இந்த மணல் குவாரிகளை அரசே ஏற்றும் நடத்தும் என்ற அறிவிப்பை நாங்கள் வெளியிட்டு, அரசே நடத்தி வருகிறது. இன்னும் ஒரு வார காலத்திற்குள், சீர் செய்யப்பட்டு, மணல் குறைந்த விலையிலே உங்கள் இல்லம் தேடி வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்கு தேவையான அளவிற்கு, மணலை, அரசு வழங்கும் என்பதை இந்த தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் மீது

அளவுகடந்த பற்றுடையவர்கள்
ஈரோடு மாவட்ட மக்கள் என்பதை
நீங்கள் எப்படி பல சந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டினீர்களோ,

அதைப்போல் மாண்புமிகு அம்மா அவர்களும்,
அம்மா அவர்களுக்குப் பிறகு
அம்மா வழி வந்த இந்த அரசும்
ஈரோடு மக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை
அடுக்கடுக்காக வழங்கி வருகிறது.

இன்னும் பல திட்டங்களையும்
வழங்க இருக்கிறது என்பதையும் இங்கு நான்
தெரிவித்துக் கொள்வதில் பெருமைப்படுகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள்
இந்த மாவட்டத்திற்கு செய்ய வேண்டுமென்று
விட்டுச் சென்ற பணிகளை நாங்கள் தொடர்ந்து செய்வோம்.
என்று உறுதியளிக்கின்றேன்.

ஈரோடு நகரத்தில், குறுகிய சாலையாக இருப்பதால், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது என்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவே, போக்குவரத்து நெரிசலை

முற்றிலும் குறைக்க வேண்டுமென்பதற்காக, ஏற்கனவே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அரசு மருத்துவமனைக்கு அருகிலே, ஒரு உயர்மட்டப்பாலம் அறிவித்து, அதற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது போதாது, இந்த ஈரோடு பெருந்துறை சாலை மிகுந்த போக்குவரத்து நெரிசல் உள்ள சாலை. விழா காலங்களிலும், திருமண நாட்களிலும் வாகனங்கள் அதிகமாக செல்கின்ற காரணத்தினால், போக்குவரத்து நெரிசல் அதிகரிக்கிறது. ஆகவே, உயர்மட்டப்பாலம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். ஆகவே, இப்பொழுது அரசு மருத்துவமனைக்கு அருகில் கட்டப்பட்டுள்ள பாலத்திலிருந்து, எவ்வளவு தூரம் பாலம் வேண்டுமோ, அவ்வளவு தூரம் உயர்மட்டப்பாலம் அமைத்துக் கொடுக்கப்படும் என்ற நற்செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் போக்குவரத்து நெரிசல் இல்லாத சூழ்நிலை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, இந்த ஈரோடு, பெருந்துறை சாலையிலிருந்து, ஈரோடு–கோபியை இணைக்கின்ற சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். எனவே, ஈரோட்டிலிருந்து, சிற்றோடு வழியாக கோபி செல்கின்ற சாலை, கனிராவுத்தர்குளம் வரை

விரிவுபடுத்தப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியினை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கோபியிலே ஒரு புறவழிச்சாலை, மொடக்குறிச்சி சட்டமன்ற பகுதிக்கு ஒரு பேருந்து நிலையம், அந்தப் பகுதியில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் போதிய இடவசதி இல்லாமல் இருக்கிறது என பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த மாவட்டம், அம்மாவினுடைய மாவட்டம். அம்மாவினுடைய கோட்டையாக விளங்கிக் கொண்டிருக்கும் மாவட்டம். இந்த மாவட்ட மக்களுக்கு திட்டங்களை நிறைவேற்றுவது எங்களது கடமை என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கொங்கு மண்டலத்தின்
மையப்புள்ளியாக விளங்கும்
இந்த ஈரோடு மாநகரத்திலுள்ள
பொன்விழா கண்ட
ஸ்ரீவாசவி கல்லூரியில்தான் நான் படித்தேன்.

என் கல்லூரி நாட்களில்
பல நண்பர்கள் எனக்குக் கிடைத்தார்கள்.
அவர்களெல்லாம் உண்மையானவர்களாகவும்,

நம்பிக்கைக்குரியவர்களாகவும்,
உள்ளன்புமிக்கவர்களாகவும் இருந்தார்கள்.
அப்படிப்பட்ட நட்பும் நம்பிக்கையும் தான்
எதிர்காலத்தில் எனது பொது வாழ்க்கைக்கு
பலமாக இருந்தது.
இதை கூறுகிறபொழுது
எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒருவன் தன் ஊரை அடைய
காட்டு வழியே நடந்து கொண்டிருந்தான்.
இருட்டிவிட்டது.
இருட்டிலே நடந்தால்
மிருகங்கள் அடித்துவிடும் என்று நினைத்து
ஒரு மரத்தடியில் உட்கார்ந்தான்.
அவனைப்போல இன்னொருவன்
தனியாக வந்து கொண்டிருந்தான்.

இரண்டுபேரும் எதிர்பாராமல்
சந்தித்து நண்பர்களாகி
ஒருவருக்கு ஒருவர் துணையாக
காட்டைக் கடந்து  விடலாம்

என்று நடக்க ஆரம்பித்தார்கள்.

வழியில் எந்த ஆபத்து வந்தாலும்

ஒருவருக்கு ஒருவர்

உதவி செய்து கொள்ள வேண்டும் என்றும்

ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

சிறிது தூரத்தில் கரடி ஒன்று வந்தது.

அதைப் பார்த்ததும் ஒப்பந்தத்தை மறந்து

ஒருவன் ஓடிப்போய் மரத்தில் ஏறிக்கொண்டான்.

மற்றவனுக்கு மரம் ஏறத்தெரியாது.

திடீரென்று கீழே விழுந்து

மூச்சை தம் கட்டிக் கொண்டு கிடந்தான்.

கரடி கீழே கிடந்தவனை முகர்ந்து பார்த்து,

இவன் இறந்துவிட்டான் என்று திரும்பியது.

மரத்திலிருந்து இறங்கியவன்,

கீழே கிடந்தவனிடம்

‘‘கரடி உன் காதில் ஏதோ கூறியதே, அது என்ன ?’’

என்று கேட்டான்.

‘ஒப்பந்தத்தை மீறிய

உன்னை மாதிரி நம்பிக்கை துரோகிகளிடம்

இனிமேல் நட்பு வைத்துக் கொள்ளக்கூடாது!’

என்று கரடி சொன்னதாக அவன் கூறினான்.

நெருக்கடி வருகிறபோது

உதவிக்கரம் நீட்டுகிறவர்கள்தான்

உண்மையான நண்பர்கள் என்பதை நாம்

புரிந்துகொள்ள வேண்டும்.

என் நண்பர்களை நான் முழுமையாக நம்புகிறேன்.

அந்த நம்பிக்கைதான் என்னை இந்த அளவிற்கு

உயர்த்தியிருக்கிறது.

என்னாலும் என் நண்பர்கள் உயர்வார்கள்

எனக்கூறி...

இது விவசாயிகள் நிறைந்த மாவட்டம். விவசாயிகளுக்கு என்னென்ன தேவை என்பதை அறிந்து அதை உங்களுக்குச் செய்வது என்னுடைய கடமை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, நானும் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்து, வளர்ந்ததால், விவசாயிகளுக்கு என்ன இடர்பாடுகள் ஏற்படும் என்றெல்லாம் நன்கு அறிந்தவன். ஆகவே, விவசாயிகளின் உற்ற தோழனாக அம்மாவினுடைய அரசு இருக்கும், தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கும், வழங்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த மாவட்ட மக்கள் உழைப்பாளர்கள், விசுவாசிகள், அவர்கள் அம்மாவினுடைய

அரசுக்கு தொடர்ந்து நல்லாதரவு வழங்க வேண்டுமென்று கேட்டு, சிறப்பான, எழுச்சியான இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி!

வணக்கம்!

***

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**